# ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா

*5 ஆண்டுகளில் 50 நிகழ்ச்சிகள் படைத்த வரலாறு!*

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை)யின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா 22.11.2015 அன்று சிங்கப்பூரில் உமறுப்புலவர் தமிழ் மொழி நிலைய உள்ளரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

கல்வியைக் கருப்பொருளாய் கொண்டு நிகழ்ந்த இவ்விழாவில், மலேசிய வானொலி, மற்றும் தொலைக்காட்சிப் படைப்பாளர், வழக்குரைஞர் திரு. எஸ். பாண்டித்துரை "கற்க கசடற" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

கடந்த 5 ஆண்டுகளாக சிங்கப்பூரில் கல்வி சார்ந்த சமூகப் பணிகளை செய்துவரும், இச் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு சிறப்பு மலர் வெளியீடு செய்யப்பட்டு, அதன் முதல் பிரதியை எம்.இ.எஸ். குழுமத்தின் தலைமை நிர்வாகி ஹாஜி எஸ்.எம். அப்துல் ஜலீல் பெற்றுக்கொண்டார்.

சிங்கப்பூரின் 50ஆவது ஆண்டு பொன்விழாக் கொண்டாடி மகிழும் வேளையில், ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் ஆரம்பித்து 5 ஆண்டுகளில் 50 நிகழ்ச்சிகளை வெற்றி கரமாக நடத்தி முடித்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

"பயங்கரவாத மிரட்டல்களை எதிர்நோக்கும் இன்றைய சூழ்நிலையில், நாம் அனைவரும் ஒன்றுபட்டு மிகுந்த விழிப்புணர்வோடு செயல்பட்டு, சிங்கப்பூரின் பாதுகாப்பிற்கும் அமைதிக்கும், நமது பங்களிப்பை வழங்கவேண்டும்," என்று தனது வரவேற்புரையில் கேட்டுக்கொண்டார், சங்கத்தின் தலைவர் கணக்காய்வாளர், டாக்டர் முஹிய்யத்தீன் அப்துல் காதர்.

ஜமால் முஹம்மது கல்லூரியின் முதல்வர் டாக்டர் எஸ்.முஹம்மது சாலிஹ் தலைமையில், கல்லூரியின் தாளாளர் டாக்டர் ஏ.கே.காஜா நஜீமுதீன், துணைச் செயலாளர் ஹாஜி எம்.ஜே. ஜமால் முஹம்மது ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். கல்லூரியின் துணை முதல்வர் டாக்டர் ஏ.முஹம்மது இப்ராஹீம், கூடுதல் துணை முதல்வர் டாக்டர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரியின் மேலாண்மைத் துறை இயக்குநர் டாக்டர் கே.அப்துஸ் ஸமது மற்றும் சுயநிதிப் பிரிவு இயக்குநர் பேராசிரியர் கே.என்.அப்துல் காதர் நிஹால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்கத்தின் செயலாளர் அப்துல் சுஹபான், மற்றும் செயலவை உறுப்பினர் ஃபரீஜ் முஹம்மது ஆகியோர் நிகழ்ச்சி நெறியாளராக, இவ்விழாவினை வழிநடத்தினர்.

டாக்டர் நாகூர் ரூமி எழுதிய கல்லூரியைப் பற்றிய சிறப்புப் பாடலை "நூருல் ஹுதா" இசைக்குழுவினர் வழங்கியது செவிகளுக்கு விருந்தாக அமைந்திருந்தது.



## ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் குடும்பதின நிகழ்ச்சி

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), ஞாயிற்றுக்கிழமை 13.03.2016 அன்று, காலை 10 மணி முதல், மாலை 6 மணி வரை, "சமய நல்லிணக்க குடும்பதின நிகழ்ச்சி" ஒன்றை, சிங்கப்பூர் (EAST COAST PARK) கிழக்கு கடற்கரைப் பூங்காவில் மிகச் சிறப்பாக நடத்தியது.

ஒற்றுமையைப் பறைசாற்றும் வகையிலும், சமய நல்லிணக்கத்தை மேம்படுத்தி ஒன்றுபட்ட சமுதாயமாக வாழ்வதன் அவசியத்தை வலியுறுத்தியும், நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில், மாணவ மாணவிகளுக்கான ஓவியப்போட்டி, மணலில் வீடுகட்டும் போட்டி, பெற்றோர்களுக்கான போட்டி போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. மதிய உணவும், தேநீர் விருந்தும், அதிர்ஷ்டக் குலுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட இக்குடும்பதின நிகழ்ச்சியில், சுமார் 200 பேர் கலந்து சிறப்பித்தனர்.

